**OPEN ACCESS**

Manuscript ID: TAM-09022024-8363

Volume: 9

Issue: 1

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.07.2024

Accepted: 23.09.2024

Published: 01.10.2024

Citation:
Raja, A. "Thanjavur Maratha Period Inscription : Presenting the Tamil University Museum Evidences." *Shanlax International Journal of Tamil Research,* vol. 9, no. 2, 2024, pp. 19–22.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8363

*Corresponding Author:
rajaarchy@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Thanjavur Maratha Period Inscription : Presenting the Tamil University Museum Evidences

**A. Raja**
*Head, Department of Museum, Tamil University*
*Thanjavur, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0001-8820-2413*

**Abstract**
*After the rule of the Cholas in Tamil Nadu, chaos began to arise due to lack of power. The decline of the Pandyas prevailed as Hoysala influence. A country that was restless until the rise of the Vijayanagara state in Andhra, the Nayaks usurped power in Madurai when the whole of South India came under Vijayanagara rule. Chola Nadu, a part of Tanjore, was also under the rule of the Nayaks. By chance, the Tanjore region was ruled by the Marathas by interfering in the conflict between the Nayaks of Tanjore and Madurai. From 1676 to 1855 various inscriptions refer to the Marathas of Tanjore. In particular, this article explains the antiquity of three inscriptions found at Pudhalur in Thanjavur and Muthammalchatram near Orathanadu and the historical messages it mentions.*

***Keywords:*** *Thanjavur Maratha Inscriptions, Inscriptions Details, Muthammaal Chatram, Land Grant, Maratha Koll, Yagasala, History of Tamil Nadu*

**References**

1. Raju, S., (1987), Thanjai Marathiyar kalvettukal, Tamil University, Thanjavur.
2. Subramaniyam,T.N., (1977), Thenninthiya koyil sasanankal, Vol.2, Arasinar keezhthisai chuvadi Noolagam, Chennai.

# தஞ்சை மராட்டியர் காலக் கல்வெட்டுக்கள்: தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகச் சான்றுகளை முன்வைத்து

***முனைவர் ஆ. ராஜா***
தலைவர், அருங்காட்சியகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழகத்தில் சோழர்கள் ஆட்சிக்குப் பிறகு ஆற்றல் மிகுந்த ஆட்சியின்மையால் குழப்பங்கள் எழத்தொடங்கின. பாண்டியர்களின் வீழ்ச்சி, ஹொய்சளர் செல்வாக்கு என நிலவியது. ஆந்திரத்தில் விஜயநகர அரசு உருவாகும் வரை அமைதியின்றி இருந்த நாடு, தென்னிந்தியா முழுவதும் விஜயநகர ஆட்சியின் கீழ் வந்தவுடன் மதுரையில் நாயக்கர்கள் ஆட்சியைத் தன்வசப்படுத்தினர். தஞ்சைப் பகுதியான சோழநாடும் நாயக்கர்களின் ஆட்சிக் கட்டுப்பாட்டில் இருந்தது. தஞ்சை, மதுரை நாயக்கர்களின் இடையே எற்பட்ட பூசலில் தலையிட்டு சந்தர்ப்பவசத்தால் தஞ்சைப் பகுதியின் ஆட்சியானது மராட்டியர்கள் வசமானது. 1676 முதல் 1855 வரை தஞ்சை ஆட்சி புரிந்த தஞ்சை மராட்டியர்கள் பற்றிய செய்திகளைப் பல்வேறு கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. குறிப்பாகத் தஞ்சைப் பகுதியில் பூதலூர் மற்றும் ஓரத்தநாடு அருகிலுள்ள முத்தம்மாள்சத்திரம் ஆகிய இடங்களில்களில் கிடைத்த மூன்று கல்வெட்டுக்களின் தொன்மை வரலாறு அவை குறிப்பிடும் வரலாற்றுச் செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது.*
***முக்கியச் சொற்கள்:*** *தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், கல்வெட்டுச் செய்திகள், முத்தம்மாள்சத்திரம், நிலக் கொடை, மராட்டியர்கால கோல், யாகசாலை, தமிழ்நாட்டு வரலாறு.*

தஞ்சை மராட்டிய மன்னர்களின் வரலாற்றை அறிவதற்குக் கல்வெட்டுக்கள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், அரியத்தாள் ஆவணங்கள், சத்திரங்கள் போன்றவை பெரிதும் துணைபுரிகின்றன. அவ்வகையில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்திலுள்ள மூன்று மராட்டியர்கள் காலக் கல்வெட்டுக்கள் ஓரத்தநாடு அருகிலுள்ள முத்தம்மாள் சத்திரத்தின் வரலாற்றை அறிவதற்கு முதன்மை ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. இத்தகையக் கல்வெட்டுக்கள் குறிப்பிடும் வரலாற்றுச் செய்திகளையும் அதன் தொன்மைச் சிறப்புகளைக் குறித்தும் இக்கட்டுரை விளக்குகிறது.

## முதலாம் சரபோசி கல்வெட்டு

பூதலூர் என்ற ஊர் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்கே இரண்டு கி.மீ தொலைவில் அமைந்துள்ள அய்யனார் கோயிலுக்கு அருகில் மேற்கு புறமுள்ள நீரோடை வாய்க்காலில் கல்வெட்டு ஒன்று கண்டறியப்பட்டது. இக்கல்வெட்டில் எழுத்து தொடங்குவதற்கு முன் சூலம் பொறிக்கப்பட்டுள்ளது. தென்னிந்தியக்கோயில் சாசனங்கள் என்னும் நூலில் இக்கல்வெட்டுப் பற்றிய குறிப்புள்ளது (தி.நா.சுப்பிரமணியம், ப.608:1954).

1. மன்மத வருசம்
2. தை மீ(மாதம்) 2
3. 8 உ(தேதி) பூதலூ
4. ர் ஆபற்சகா
5. ய சுவா
6. மிக்கு ராச
7. ஸ்ரீ சரபோ
8. சி ராசா
9. அவர்கள்

10. அபிஷேக க
11. ட்டளைக்கு வி
12. ட்ட நிலம்
13. 10 அடி கோ
14. லால் கா
15. ரில் வேலி
16. அரை பி
17. சானத்தி
18. ல் வேலி
19. அரை

இக்கல்வெட்டானது முதலாம் சரபோசி மன்னனின் கல்வெட்டாகும் (செ.இராசு, பக்.120-121:1987). மன்மத ஆண்டு தை மாதம் 28ஆம் நாள் (26.01.1715) பூதலூரில் அமைந்துள்ள ஆபத்சாகய ஈசுவரர் திருக்கோயிலில் உள்ள சிவனுக்கு பூஜைக்காக அதாவது அபிஷேகக் கட்டளைக்காகக் கார் நெல் விளையும் இடத்தில் அரை வேலியும், சம்பா நெல் விளையும் இடத்தில் அரை வேலியும் ஆக ஒரு வேலி நிலம் கொடையாக அளிக்கப்பட்டச் செய்தியை இக்கல்வெட்டில் காணமுடிகிறது. இந்த ஒரு வேலி நிலம் 10 அடிக்கோலால் அளந்து கொடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தஞ்சை மராட்டியர் காலத்தில் குறிப்பாக முதலாம் சரபோசி மன்னர் காலத்தில் 10 அடிக்கோல் என்ற நில அளவு முறை சோழநாட்டில் இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

## இரண்டாம் சரபோசி கல்வெட்டு

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டுக்கு அருகில் முத்தம்மாள் சத்திரம் உள்ளது. இந்தச் சத்திரத்திலுள்ள மாணவர் விடுதியின் பின்புறத்தில் உள்ள அறையில் இந்தக் கல்வெட்டு கிடைத்தது. இக்கல்வெட்டானது ஒரு சதுர வடிவிலுள்ள துண்டுக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் ஒருபுறத்தில் தமிழ் எழுத்திலும் மறுபுறத்தில் மராத்திமொழியிலும் எழுத்துக்கள் உள்ளன. இக்கல்வெட்டின் கீழ்ப்பகுதி சிதிலமடைந்த நிலையில் காணப்படுகிறது. சாலிய வாகன சகம் 1747 (கி.பி.1825) எனத் தொடங்கும் இக்கல்வெட்டு பார்த்திப ஆண்டு சவுபாக்கியவதி முத்தம்மாள்புரம் அன்னச் சத்திரம் தர்மத்துக்குக் கொடுத்த கொடையைக் குறிப்பிடுகிறது. தஞ்சை மராட்டிய மன்னர்கள் செய்த அறக்கொடைகளுள் நிலையானதும் பெரியதுமானது அவர்களால் கட்டமைக்கப்பட்ட சத்திரங்களேயாகும். சோழவள நாட்டிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் சாலைகள் குறிப்பாக கிழக்குக் கடற்கரைச் சாலைகளில் மராட்டியர்களின் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் கட்டமைக்கப்பட்டன. இவற்றுள் 1743 முதல் 1837 வரை 20 க்கும் மேற்பட்ட சத்திரங்களை மராட்டிய மன்னர்கள் உருவாக்கியுள்ளனர். அவற்றுள் ஒன்றுதான் இந்த முத்தமாள் சத்திரம்.

இந்த 20 சத்திரங்களுக்கென்று 16 இனாம் கிராமங்களும், 11 சுரோத்திரியக் கிராமங்களும், 31 ஊர்களில் பல இடங்களில் நிலங்களும் மானியமாக அளிக்கப்பெற்றிருந்தன. இந்த நிலங்கள் 40,000 ஏக்கர் பரப்பளவைக் கொண்டனவாகும். இந்தச் சத்திரங்களில் மிகப் பெரியவையாகவும், சிறப்பு மிக்கதாகவும் இருந்தது முத்தம்மாள் சத்திரமாகும். இரண்டாம் சரபோசி தம் அன்புநாயகி முத்தம்மாளின் நினைவாக 1800இல் கட்டப்பட்டது தான் முத்தம்மாள் சத்திரம்.

## முத்தம்மாள் சத்திரக் கல்வெட்டு

1. சாலிய வாக
2. ன செகம் 17
3. 47 பாற்த்தி
4. ப னாம ஸ(ம்) வ
5. ச்சரம் சவு
6. பாக்கியவதி மு
7. த்தம்மாள் பு
8. ரம் அன்ன ச
9. த்திரம் தற்மத்

## யாகசாலைக் கல்வெட்டு

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டின் அரசினர் பெண்கள் மேல் நிலைப்பள்ளிக்கு

மற்றும் ஊருக்கு கிழக்குப் பகுதியில் யாகசாலைக்காகக் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டிருந்திருக்கிறது. அக்கட்டிடம் காலப்போக்கில் இடிபாடுகளுக்கு உட்படுத்தப்பட்டமையால் அதில் இருந்த கல்வெட்டுக் கல்லும் அப்புறப்படுத்தப்பட்டு அருகில் இருந்த சாக்கடையில் கிடந்துள்ளது (செ.இராசு,பக்.141-142:1987). அவற்றை புலவர் செ.இராசு கண்டறிந்து தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எடுத்து வந்துள்ளார். அக்கல்வெட்டானது இரண்டாம் சரபோசி காலத்துக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டானது மராத்திமொழியில் உள்ளது. தஞ்சை மராட்டிய மன்னரான இரண்டாம் சரபோசி அவர்கள் 1809ஆம் ஆண்டு ஒரத்தநாட்டில் ஊரின் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள குளத்தின் கரைகளில் இரண்டு யாகங்களைச் செய்துள்ளார். அதில் கிழக்கிலுள்ள குளக்கரையில் செய்யப்பட்ட யாகம் குறித்து இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இந்த யாகத்திற்கான பணிகள் சுக்கில ஆண்டு மாசி மாதம் 14ஆம் நாள், முதல் பங்குனி மாதம் 14ஆம் நாள் வரை நடைபெற்றுள்ளது.

அக்னிஷ்டோம யாகம், அதிராத்ர யாகம் போன்ற யாகங்கள் முறையே சாமவேதி அப்பாசாமி தீட்சிதர், இருக்குவேதி சுப்பிரமணிய தீட்சிதர் ஆகியோரைக்கொண்டு செய்யப்பட்டன. மராத்தி மொழியில், இக்கல்வெட்டு இருப்பதால் தமிழில் மொழிபெயர்த்து இங்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சரபோசி மகாராசா இந்த இடத்தில் அப்பாசாமி அத்வாரி என்பவர் சோம யாகத்தையும், சுப்பிரமணிய அத்வாரி என்பவர் அதிராத்ர யாகத்தைச் சயனபூர்வத்துடன் செய்யும்படி உதவி புரிந்தார்கள்.

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1731ல் சுக்கில வருடம் மாசி மாதம் 14ஆம் தேதி திங்கட்கிழமை முதல் பங்குனி மாதம் வளர்பிறை 14ஆம் தேதி திங்கட்கிழமை முடிய ஸ்ரீமான் சத்திரபதி ராசஸ்ரீ சரபோசி மகாராசா அவர்கள் முக்தாம்பாள்புரம் கிராமத்தில் ஒரு யாகசாலைக் கட்டிடம் கட்டுபடி செய்தார்கள். மேற்படி இடத்துக்குச் சாமவேதி அப்பாசுவாமி தீட்சதர் வந்து அக்னிஷ்டோம யாகத்தை அதனபூர்வத்துடன் அவருடைய யாகசாலையில் செய்துவிட்டு இருக்வேதி சுப்பிரமணிய சடா வல்லபரை முக்கியமான யாகம் நடத்தப்பட வேண்டி இடத்தில் கற்கள் சேகரித்து ஒரு கட்டிடம் கட்டிக்கொண்டு பிரதிபாதி அதிராத்ர யாகத்தை அதனபூர்வத்துடனும் சயன பூர்வத்துடனும் செய்யும்படி செய்வித்தார். மேற்படி யாகம் மேற்கண்டவிதமாக நடந்தேறியது.

என்று கல்வெட்டு வாசகங்கள் குறிப்பிடுகின்றன. முத்தம்மாள்புரம் கிராமத்தில் இரண்டாம் சரபோசியால் யாகசாலை கட்டிடம் கட்ட வேண்டும் என தீர்மானித்து, அதன் அடிப்படையில் யாகசாலை கட்டப்பட்டு சாமவேத, ரிக்வேத தீட்சதர்களைக்கொண்டு யாகங்கள் செய்யபட்டதை இக்கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது.

## துணைநின்ற நூல்கள்

1. இராசு,செ., (1987), தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
2. சுப்பிரமணியம், தி.நா., (1977), தென்னிந்திய கோயில் சாசனங்கள், தொகுதி 2, அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.